**அனுராதபுரம் மாவட்டத்தின் 43 கமநல சேவைக் குழுக்களின் - 2022**

---

**1. கணக்காய்வு அபிப்பிராயம்**

1.1 அனுராதபுரம் மாவட்டத்தின் 43 கமநல சேவைக் குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** 2022 ஆம் ஆண்டிற்குரிய அனுராதபுரம் மாவட்டத்தின் 43 கமநல சேவைக் குழுக்களுக்குரிய கணக்காய்வு அறிக்கை விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 43 குழுக்களுக்காகவும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுக்கள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 28 கமநல சேவை குழுக்களுக்கு 2021 திசெம்பர் மாதம் கிடைக்கப்பெற்ற கூட்டுப்பசளை கலக்கும் இயந்திரம் / கூட்டுப்பசளை கூறுகளாக்கும் இயந்திரங்களின் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதியின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திரங்களின் பெறுமதி மாவட்ட அலுவலகத்திலிருந்து பெற்று கணக்கீடு செய்யப்படும். | கமநல சேவை குழுக்களுக்குச் சொந்தமான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பெறுமதி இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) 06 கமநல சேவை குழுக்களினால் கூட்டுப்பசளை விற்பனை செய்வதற்குரிய வியாபாரக் கணக்கு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி இருப்பின் கிரயத்தை பெறுமதி இடுவதற்கு முடியாதிருந்ததுடன் ஆரம்ப இருப்பிலும் பெறுமதியைக் கண்டறிவதற்கு முடியாதிருந்தமையால் செலவினம் மற்றும் வருமானங்களுக்கு இடையிலான வேறுபாடு | வியாபாரக் கணக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | |
| (இ) | 04 கமநல சேவை குழுக்களில் கூட்டுமொத்தமாக ரூபா 647,540 ஆன காலாவதியான விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் பசளை இருப்புக்கள் மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த இருப்புகளை அகற்றுவதற்காக இருப்புக் கட்டுப்பாட்டு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் வழங்கப்படுகின்ற ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்புக்களின் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 08 கமநல சேவை குழுக்களுக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற இயந்திரம் மற்றும் 03 உபகரணங்களில் சேதனப் பசளை கூறுகளாக்கும் 02 இயந்திரங்கள், வேளாண்மை நாற்றுக்களை நட்டும் 08 இயந்திரங்கள், 03 கணனி இயந்திரங்கள் மற்றும் 06 புல் வெட்டும் இயந்திரங்கள் என்பவற்றின் பெறுமதி மற்றும் 10 வகையான இயந்திரங்களுக்குரிய 26 உபகரணங்கள் மற்றும் நாற்றுக்கள் இடப்படும் 24000 தட்டுக்களின் பெறுமதி என்பன இனங்கண்டு நடைமுறையல்லாச் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது அந்தப் பெறுமதி கிடைத்த பின்னர் நடைமுறையல்லாச் சொத்தாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குழுவிற்குச் சொந்தமான சகல நிலையான சொத்துக்களும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | கஹட்டகஸ்திகிலிய கமநல சேவை குழுவில் அதிக விலையில் சோளப் பசளைக்குரிய வியாபாரக் கணக்கில் ரூபா 88,614,900 விற்பனை வருமானம் கொண்டுவரப்படாதிருந்ததுடன் அதிக விலையில் சோளப் பசளைகளுக்குரிய மொத்த இலாபம் அல்லது நட்டம் நிதி செயலாற்றல் கூற்றில் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வியாபாரக் கணக்கு சரியாக தயாரித்து சரியான மொத்த இலாபம் அல்லது நட்டம் நிதி செயலாற்றல் கூற்றில் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஊ) | மடாட்டுகம கமநல சேவை குழுவில் 2012 முதல் 2021 திசெம்பர் வரை 09 வருடங்கள் | அந்த மீதி தொடர்பான விடயங்களை கண்டறிந்து எதிர்வரும் | பழைய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அளவிலான காலத்தில் இருந்து இனங்காணப்படாத செலவு மீதியாக நிதிக் கூற்றுக்களில் தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 786,172 தொங்கல் கணக்கின் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுகளில் அதனை சரி செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (எ) | பளுகஸ்வெவ கமநல சேவை குழுவில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யூரியா பசளை மிகுதி இருப்பு ரூபா 4,227,900 ஆக இருந்த போதிலும் வியாபாரக் கணக்கில் அது உள்ளடக்கப்படாமையால் யூரியா பசளை இலாபம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | வியாபாரக் கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது ஆட்டியாகல கமநல சேவை குழுவினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 212,750 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 60,626 பெறுமதியான கணனி மற்றும் துணைப் பாகங்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | சாலியபுர கமநல சேவை குழுவில் அதிக விலையில் கொள்வனவு செய்யப்பட்ட பசளை சோள விற்பனை ரூபா 536,625 மற்றும் கொள்வனவுகள் ரூபா 944,018 குறைவான விலையில் பசளை (சோளம்) வியாபாரக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | சரி செய்யப்படும். | விற்பனை வருமானம் சரியாக இலாப நட்டக் கணிப்பீட்டில் சீராக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | வங்கியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சாலியபுர கமநல சேவை குழுவில் பசளை முதலீட்டு கணக்கின் மீதி ரூபா 36,304,023 ஆக | சரி செய்யப்படும். | நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி சரியாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 50,304,024 ஆனமையால் பசளை முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 13,999,999 இனால் அதிகரித்து நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இராஜாங்கனை கமநல சேவை குழு களஞ்சியத்தில் பௌதீக ரீதியில் காணப்பட்ட ரூபா 23,550 பெறுமதியான MOP பசளை இருப்பு மற்றும் ரூபா 287,670 பெறுமதியான யூரியா (நெற் பயிர்ச்செய்கை) பசளை இருப்பு எஞ்சிய இருப்பில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் மொத்த சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த யூரியா இருப்புக்களுக்காக இலாப நட்ட கணிப்பீடு மேற்கொள்ளப்படாதிருந் ததுடன் அந்த இருப்புக்கள் 2022/23 பெரும்போகத்தில் அரசாங்கம் பசளை வழங்கும் போது அந்த தொகையும் மீண்டும் வழங்கியதன் காரணமாக இறுதி இருப்பிற்காக சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மிகுதி இருப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஔ) | கோன்வெவ கமநல சேவை குழுவில் ரூபா 327,800 பெறுமதியான விதை நெல் ஆரம்ப இருப்பு வியாபாரக் கணக்கிலும், ரூபா 70,200 அறை வாடகை வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பெரும்போகத்தில் ஆரம்ப மீதியாக குறிப்பிடப்படாதமையால் வியாபாரக் கணக்கில் ஆரம்ப மீதியில் உள்ளக்கப்படவில்லை. | ஆரம்ப இருப்பு வியாபாரக் கணக்கில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (க) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கப்புக்கொல்லாவ கமநல சேவை குழுவில் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 5,360,000 பெறுமதியான யூரியா கிலோ கிராம் 26,800 இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது இதனைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மிகுதி இருப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கா) | பொருண்மையான இருப்பு கணக்கு மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் படி மிகிந்தலை கமநல சேவை | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இறுதி இருப்புக்கள் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குழுவில் நெல்லுக்கான யூரியா இறுதி இருப்பு ரூபா 11,911,300 ஆக இருந்த போதிலும் நெல்லுக்கான யூரியா வியாபாரக் கணக்கில் இறுதி இருப்பொன்று குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (கி) | புல்நேவ கமநல சேவை குழுவில் போதியளவான இருப்பு கணக்கில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 480,000 ஆன யூரியா பசளை இருப்பு மற்றும் ரூபா 5,825,420 ஆன MOP பசளை இருப்புக்கள் வியாபாரக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பசளை இருப்புக்கள் விற்பனை செய்து சகல பணமும் பிரதி ஆணையாளருக்கு அனுப்ப வேண்டியிருந்தமையால் வியாபாரக் கணக்கை தயாரிக்கும் போது இது கவனத்திற் கொள்ளப்படவில்லை. | இருப்பு மீதிகள் சரியாக நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படல் வெண்டும். |
| (கீ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிராவஸ்திபுர கமநல சேவை குழுவில் காணப்பட்ட ரூபா 1,305,000 பெறுமதியான சோளத்திற்கான யூரியா பசளை இருப்பு மற்றும் ரூபா 5,376,600 பெறுமதியான நெற் பயிர்ச் செய்கைக்கான யூரியா பசளை இருப்பின் பெறுமதி என்பன நிதிநிலைமைக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இருப்புக்கள் போதியளவான இருப்பு கணக்கில் பதியப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் நிதி நிலைமைக் கூற்றிலும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு மீதிகளை சரியாக நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவருதல் வேண்டும். |
| (கு) | எலயாபத்துவ கமநல சேவை குழுவில் மீளாய்வாண்டிற்குரிய சோள பசளை விற்பனை வருமானம் பேரேட்டின் பிரகாரம் ரூபா 38,898,750 ஆக இருந்த போதும் வியாபாரக் கணக்கில் ரூபா 38,644,500 ஆக ரூபா 254,250 குறைத்து கொண்டுவரப்பட்டிருந்தது. | இருப்பு புத்தகங்களை சரிசெய்வதால் வேறுபாடு செய்தால் ஏற்பட்ட வேறுபாடுகளினால் வியாபாரக் கணக்கில் விற்பனை வருமானம் குறைவாகப் பதியப்பட்டுள்ளமை மற்றும் எதிர்காலத்தின் போது அதனை திரண்ட நிதியத்தில் சீராக்கி சரிசெய்யப்படும். | இருப்பு புத்தகங்களை உரிய பிரகாரம் நாளாதுவரையாக பேணிச் செல்லல் வேண்டும். |
| (கூ) | பதவி பராக்கிரமபுர கமநல சேவை குழுவின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியத்தில் | எதிர்வரும் ஆண்டின் போது அதனை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை | இருப்பு பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்ட ERP பசளை கிலோ கிராம் 30,000 பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும். | செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கெ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்பத் நுவர கமநல சேவை குழுவில் களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 4,766,630 பெறுமதியான யூரியா கிலோ கிராம் 19,761 மற்றும் விதை நெல் பூசல் 179 என்பன இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இருப்பு மீதிகளின் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கே) | பேமடுவ கமநல சேவை குழுவில் நெல் பசளை யூரியா, சோள பசளை யூரியா மற்றும் MOP பசளைகளுக்குரிய இறுதி இருப்பின் பெறுமதி முறையே ரூபா 1,850,400 தொகையும், ரூபா 600,000 மற்றும் ரூபா 4,875,000 ஆக இருந்ததுடன் அப்பெறுமதி நிதி நிலைமைக் கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு மீதிகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (கை) | அநுராதபுரம் கமநல சேவை குழுவில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,857,660 ஆன நெல் யூரியா பசளை இருப்பு பெறுமதி மற்றும் ரூபா 3,710,070 ஆன MOP பசளை இருப்புக்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | குழுவிற்கு இருப்பாக வழங்கப்பட்ட பல்வேறு சந்தர்ப்பங்களில் தீர்மானிக்கப்படுகின்ற விலைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ள தொகை ஆகும். | இருப்பு பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு கமநல சேவை குழுக்களின் சொத்து விடயங்கள் இரண்டிற்குரிய நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்ட பெறுமதிக்கும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இணங்காமைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இடையே ரூபா 188,075 கூட்டுப்பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது. | | |
| (ஆ) | 05 கமநல சேவை குழுக்களின் 09 பேரேட்டுக் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் இடையே கூட்டுப்பெறுமதி ரூபா 445,229 இணக்கமின்மை காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இணங்காமைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 03 கமநல சேவை குழுக்களின் இருப்புப் புத்தகங்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் காண்பிக்கப்படுகின்ற இருப்பு மீதிக்குமிடையே ரூபா 1,052,590 கூட்டுப்பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது. | எதிர்வரும் கணக்கு அறிக்கையில் சரிசெய்யப்படும். | இணங்காமைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | எலயாப்பத்துவ மற்றும் மூரியாகடவல கமநல சேவை குழுக்களின் இருப்பு விடயங்கள் மூன்றிற்குரிய இருப்பு புத்தகங்களின் பிரகாரம் மீதிக்கும் பொருன்மையான இருப்புக் கணக்கில் காண்பிக்கப்படுகின்ற இருப்பு மீதிக்கும் இடையே கூட்டுமொத்தமாக ரூபா 315,662 இணக்கமின்மை காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணங்காமைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 05 கமநல சேவை குழுக்களின் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற இருப்பு மீதிகளுக்கும் இருப்பு புத்தகம் மற்றும் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பு மீதிக்கும் இடையே ரூபா 8,090,324 கூட்டுப்பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்டும். | இணங்காமைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 08 கமநல சேவை குழுக்களின் நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற இருப்பு மீதிக்கும் இருப்பு மெய்மை ஆய்வு அறிக்கை மற்றும் / அல்லது பொருன்மையான | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணங்காமைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பு கணக்கில் காண்பிக்கப்படுகின்ற மீதிக்கும் இடையே ரூபா 12,365,458 கூட்டுப்பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது. | | |
| (எ) | கஹட்டகஸ்திகிலிய கமநல சேவை குழுவின் வியாபாரக் கணக்கின் பிரகாரம் சோள பசளை விற்பனை பெறுமதிக்கும் சோள பசளை வாடகை மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் அப்பெறுமதிகளுக்குமிடையே ரூபா 88,427,024 கூட்டுப்பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது. | உரிய கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற பெறுமதிகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளில் உள்ள பெறுமதிகளின் கூட்டுத்தொகை சரியாக குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான மீதியை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குதல் வேண்டும். |
| (ஏ) | கல்லஞ்சிய கமநல சேவை குழுவின் பரீட்சை மீதியின் பிரகாரம் பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதிக்கும் நிலையான சொத்து பதிவேட்டின் பிரகாரம் அந்த மீதிகளுக்குமிடையே ரூபா 1,174,022 இணக்கமின்மை காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இணங்காமைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 34 கமநல சேவை குழுக்களுக்குரிய நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 62,809,580 பெறுமதியான 36 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 187,804,875 பெறுமதியான 38 பொறுப்பு விடயங்கள் மற்றும் கப்புக்கொல்லாவ கமநல சேவை குழுவில் ரூபா 1,026,329 ஆன பொது ஒதுக்கம் மற்றும் கெப்பிட்டிக்கொல்லாவ கமநல சேவை குழுவில் ரூபா 243,906 வருமான விடயமொன்று நிலையான சொத்துப் பதிவேடு, உரித்து உறுதிப்படுத்தும் கடிதம், மீதி உறுதிப்படுத்தல் கடிதம், இருப்பு பதிவேடு, காலப்பகுப்பாய்வு இல்லாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | 2023 இன் கணக்கு அறிக்கைகளில் இந்த குறைபாடுகளைத் தயாரித்து சரியான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு தேவையான பதிவுகள், அறிக்கைகள், ஆவணங்கள் போன்றவற்றை உள்ளடக்குமாறு பிரதேச உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் ஆலோசனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்பு மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 14(3) ஆம் பிரிவு | 02 கமநல சேவைக் குழுக்கள் பல வருட காலம் முதல் கொண்டு வருகின்ற கூட்டுமொத்தமான ரூபா 2,269,633 மாற்றமடையாத காசு தொடர்பாக தொடர்புடைய பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த மாற்றமடையாத பணத்தை செலுத்த வேண்டியது யாருக்கு என்பது தொடர்பாகக் கண்டறிந்து அந்தப் பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 52(1) ஆம் பிரிவு | ஒவ்வொரு பயிர்ச் செய்கைப் போகத்திற்கும் முன்னர் விவசாய நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 04 கமநல சேவைக் குழுக்களால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1981 ஒக்டோபர் 16 ஆம் திகதிய இலக்கம் 107 என்ற திறைசேரி சுற்றறிக்கையின் 06 ஆம் பிரிவு | காசு மற்றும் இருப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து 30 கமநல சேவைக் குழுக்களினால் பிணைப்பணம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் 1987 ஒக்டோபர் 16 ஆம் திகதிய இலக்கம் 107 என்ற | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காகவும் கமநல சேவைக் குழுவின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதும் 04 கமநல சேவைக் குழுக்களில் | அந்த உறுதிச்சீட்டுக்கள் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் 17(3)(அ) பந்தி | கூட்டுமொத்தமான ரூபா 25,208,552 ஆன 213 உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்படும். | |
| (உ) | 2014 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய இலக்கம் 7/2014 (107 திருத்தப்பட்ட 03) என்ற சுற்றறிக்கை | குழுவின் எழுதுவினைஞருக்கு நாளாந்தம் கையில் வைத்திருக்கக்கூடிய ஆகக் கூடிய பணம் ரூபா 10,000 ஆக இருந்த போதும் 22 கமநல சேவைக் குழுக்களால் மீளாய்வாண்டில் 571 சந்தர்ப்பங்களின் போது ரூபா 10,116 முதல் ரூபா 6,912,934 வீச்சு வரை பணம் கையில் இருந்தது. | வங்கிக்கு உள்ள தூர அளவு, போக்குவரத்து வசதியினம் மற்றும் பிற்பகல் 3.00 மணிக்குப் பின்னர் பணம் பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டதன் காரணமாக. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 110 | இழப்பு மற்றும் நட்டம் தொடர்பான பதிவேடு பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் 14 கமநல சேவைக் குழுக்களால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இழப்பு நட்டப் பதிவேட்டை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 245 மற்றும் 257 | உறுதிப்படுத்துகின்ற உத்தியோகத்தரால் சகல கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் 04 கமநல சேவை குழுக்களில் ரூபா 65,394,478 கூட்டுத்தொகையான 130 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் | செலுத்தப்பட்ட சகல உறுதிச்சீட்டுக்கள் மற்றும் அவற்றை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்களில் ''செலுத்தப்பட்டது'' | கொடுப்பனவு செய்யப்பட்ட உறுதிச்சீட்டுக்களுக் காக ''செலுத்தப்பட்டது'' முத்திரை இட்டு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | 262(2) | முத்திரையிட்டு அதில் செலுத்தப்பட்ட திகதி மற்றும் சிற்றொப்பம் இட வேண்டியிருந்த போதிலும் 05 கமநல சேவைகளில் கூட்டுமொத்தமாக ரூபா 44,887,456 ஆன 146 உறுதிச்சீட்டுக்களுக்கு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | திகதியையும் இட்டு சிற்றொப்பம் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஐ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 264(1) | ஒவ்வொரு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களுக்காகவும் பணம் பெறுபவரால் பெறப் பட்டமைக்கு பற்றுச்சீட்டின் மூலம் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 09 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 112,385,282 கூட்டுத்தொகையான 142 உறுதிச்சீட்டுக்கள் தொடர்பாக அந்த தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5 போதியளவான அதிகார பலத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நீண்ட காலமாக கட்டியாவ கமநல சேவைக் குழுவின் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்ட ரூபா 1,169,660 பெறுமதியான 18 கணக்கு மீதிகள் மாவட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அங்கீகாரமின்றி திரண்ட நிதியத்திற்கு எதிராக சீராக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் திரண்ட நிதியத்திலிருந்து ஒதுக்கப்பட்டு இனங்காணக்கூடிய பிரகாரம் இந்தப் பழைய மீதிகளை அகற்றுவதற்கு கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு அறிவிக்கப் பட்டுள்ளதுடன் இந்த மீதிகளை அகற்றுவதற்கு முடியாதிருந்ததுடன் தேவையான சந்தர்ப்பங்களின் போது இனங்காணக்கூடிய பிரகாரம் கணக்கு மீதிகளில் குறைத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | மாவட்ட கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் திரண்ட நிதியத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகளின் கீழ் 43 கமநல சேவைக் குழுக்களின் 39 குழுக்களுக்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 13,469,488 மிகையாக இருந்ததுடன் 04 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுப்பெறுமதி ரூபா 1,197,487 பற்றாக்குறையாக இருந்தது. கடந்த ஆண்டில் 38 கமநல சேவைக் குழுக்களுக்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 18,912,558 மிகையாக இருந்ததுடன் 05 கமநல சேவைக் குழுக்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 963,320 பற்றாக்குறையாக இருந்தது. நிதி விளைவுகளில் அதிகரிப்பிற்கு குழு பசளை வருமானம், நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் ஏக்கர் வரி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது. நிதி விளைவுகளில் வீழ்ச்சிக்கு அதிக விலையில் பசளை விற்பனை வருமானம் குறைவடைந்தமை மற்றும் நிறுவனம், நிர்வாக செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 கமநல சேவைக் குழுக்களுக்கு 2019 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த 04 நீர் மட்ட மானிகள் வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அவற்றை உரிய தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீர் மட்ட மானிகளை எடுத்துச் செல்லுமாறு விவசாய சங்கங்களுக்கு அறிவித்த போதிலும் இதுவரையிலும் எடுத்துச் செல்லாப்படாமலிருந்தது டன் குளங்களில் நிறைந்துள்ளமையால் அவற்றை பொருத்துவதற்கு வசதியீனமாக இருந்தமை மற்றும் எதிர்காலத்தில் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நீர் உயரத்தை அளவிடும் மானிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 25 கமநல சேவைக் குழுக்களில் பல வருடகாலமாக செலுத்தவேண்டிய கணக்குகளாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 27,343,752 கூட்டுத்தொகையான 154 மீதிகள் தீர்த்துவைக்கப்படாமல் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | செலுத்தவேண்டிய செலவினங்களை எதிர்காலத்தில் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தவேண்டிய மீதிகளை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 28 கமநல சேவைக் குழுக்களின் நிதிநிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கிடைக்க வேண்டிய | பெறவேண்டிய மீதிகளை விரைவாக |

| | | | |
|---|---|---|---|
| | பல வருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 31,194,861 கூட்டுத் தொகையான கிடைக்கவேண்டிய 186 கணக்கு மீதிகளை தீர்த்துவைப்பதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளைத் தீர்த்துவைப்பதற்காக கமநல சேவை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | காலாவதியன இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக கிடைத்த சேதன கரைசல் பசளை 119 லீட்டர், Eco Bio உயிரியல் பசளை கிலோ கிராம் 810, ரூபா 3,929 பெறுமதியான விவசாய இரசாயன இருப்பு பௌதீக ரீதியில் காணப்படாத நிதிநிலைமைக் கூற்றில் காணப்பட்ட ரூபா 138,034 ஆன 09 இருப்பு மீதிகளும், ரூபா 326,325 ஆன கோல்டன் கரைசல் பசளை 916 போத்தல்கள் மற்றும் ரூபா 38,720 ஆன ரைசோடன் கரைசல் பசளை 44 போத்தல்கள் என்பன 05 கமநல சேவை குழுக்களின் கலஞ்சியத்தில் காணப்பட்டது. | இருப்புப் புத்தகங்களில் இருந்து நீக்குவற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியாவதற்கு முன்னர் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 13 கமநல சேவைக் குழுக்களின் அதிகார பிரதேசத்தில் காணப்பட்ட 59 நீர்ப்பாசன குளங்களின் 111 நீர்ப்பாசன வாய்கால்கள் மற்றும் 87 விவசாய வீதிகள் மறுசீரமைக்க வேண்டி காணப்பட்டது. | மறுசீரமைக்கப்பட வேண்டிய குளங்கள் மற்றும் விவசாய வீதிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மறுசீரமைப்பு நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கெக்கிராவ கமநலச் சேவைக் குழுவில் ரூபா 2,069,576 பெறுமதியான நீண்டகால கடன் மீதி பல வருடகால முதல் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அதனைத் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திலிருந்து கிடைத்த இயந்திர உபகரணங்களுக்காக செலுத்தவேண்டிய கடன் தொகையாக இருந்ததுடன் எதிர்காலத்தில் அது தீர்த்துவைக்கப்படும். | உரிய கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 279,957 கூட்டுத் தொகையான காப்புறுதிப் பணம் கமநல | இந்த மீதிகள் நீண்டகாலமாக காணப்படும் மீதியாகும். இதனைத் | உரிய பணத்தை விரைவாக கமநல காப்புறுதிச் சபைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | காப்புறுதி சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மடாட்டுகம கமநல சேவை குழுவில் நிறுத்தி வைக்கப்பட்டதன் காரணமாக விவசாயிகளுக்குரிய காப்புறுதி நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | தீர்த்துவைப்பதற்கு எதிர்காலத்தில் உரிய நிறுவனத்திற்கு செலுத்துவாற்கு நடவடிககை எடுக்கப்படும். | அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | முறியாக்கடவல கமநல சேவைக் குழுவில் 2011 ஆம் ஆண்டின் போது பிரதேச அபிவிருத்தி வங்கியில் நிலையான வைப்பொன்றை ஆரம்பிப்பதற்காக எழுதப்பட்ட ரூபா 450,000 பெறுமதியான காசோலை குழுவின் உத்தியோகத்தரால் அவரின் தனிப்பட்ட கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை மற்றும் வட்டியினை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ அல்லது அந்தப் பணத்தை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்தப் பணம் தொடர்பாக பிரதி ஆணையாளரின் ஆலோசனையைப் பெற்று மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | கம்பிரிகஸ்வெவ கமநல சேவைக் குழுவில் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரிடமிருந்து இருப்புப் பற்றாக்குறை தொடர்பாக அறவிடவேண்டிய 2014 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 163,215 நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமலிருந்ததுடன் நிதிநிலைமைக் கூற்றில் கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணத்தை விரைவாக அறவிடல் வேண்டும். |
| (ஒ) | 2005/2006 பெரும்போகத்தில் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தனியார் நெல் ஆலை உரிமையாளர்களிடமிருந்து சிராவஸ்த்திபுர கமநல சேவைக் குழுவிற்கு பெற்றுக் கொள்வதற்கு காணப்பட்ட ரூபா 1,025,642 தொகை தொடர்பான | ரூபா 995,642 தொகையை செலுத்துவதுடன் இடையில் நிறுத்தப்பட்டமையை கண்டறிந்து மீண்டும் அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் 2012.07.12 ஆம் திகதி முதல் அமுல்படும் வகையில் மூன்று வருடகாலத்திற்குள் மாதாந்தம் ரூபா 30,000 வீதம் கமநலச் சேவைக் குழுக்களுக்கு அந்தத் தொகையைச் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் மேலும் ரூபா 995,642 தொகை அறவிடவேண்டி காணப்பட்டது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 100 மெற்றிக் தொன் சேதனப் பசளை உற்பத்தி செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் ரூபா 10,012,860 கிரயத்தினைச் செய்து 12 கமநல சேவைக் குழுக்களால் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப்பசளை அளவில் ரூபா 3,635,016 விற்னை வருமானமொன்று மாத்திரம் உழைக்கப்பட்டிருந்ததுடன் மிகுதியாகக் காணப்பட்ட பசளை இருப்பு திறந்த வெளியில் வைக்கப்பட்டதன் காரணமாக புல் வளர்ந்து காணப்பட்டமை மற்றும் காலாவதியாகியமையின் காரணமாக பசளைகளின் தரத்தன்மை குறைவடைந்தமையால் விற்பனை செய்வதற்கு முடியாத நிலையில் காணப்பட்டது. | உற்பத்தி கிரயத்தை மேவுகை செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கூட்டுப்பசளை உற்பத்தி செயற்திட்டத்தை செயற்திறனாக நடாத்திச் செல்லல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 28 கமநல சேவை குழுக்களுக்களுக்கு 2021 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற கூட்டுப் பசளை அரைக்கும் இயந்திரம் கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி வரையிலும் கூட்டுப் பசளை உற்பத்தி செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் | இந்த இயந்திரங்கள் வழங்கப்பட்ட போதும் அதனைப் பயன்படுத்துவதற்குத் தேவையான உழவு இயந்திரத்தைப் வழங்காதிருந்தமையால் எதிர்காலத்தின் போது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை | இயந்திரத்தை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்று காணப்பட்டது. | எடுக்கப்படும். | |
| (ஆ) | காலநிலை மாற்ற நீர்ப்பாசன விவசாய செயற்திட்டத்தின் கீழ் 03 கமநல சேவை குழுக்களுக்களுக்கு 02 அரிவி வெட்டும் இயந்திரங்கள் மற்றும் 10 வேளாண்மை நட்டும் இயந்திரங்கள் மற்றும் அதற்காக கிடைக்கப்பெற்ற 16000 நாற்று தட்டுக்கள் என்பவற்றை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் வேளாண்மை நட்டும் இயந்திரத்தை பயன்படுத்தி மாதரிகளாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இயந்திரத்தை பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது ஹொரவப்பொத்தான கமநல சேவை குழுவிற்கு 05 இயந்திர உபகரண வகைகளின் கீழ் கிடைக்கப்பெற்ற 12 உபகரணங்கள் கணக்காய்வுத் திகதியான 2023 மே 23 ஆம் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டதுடன் இந்த இயந்திரங்கள் பாதுகாப்பற்ற வகையில் நிலையத்தின் சூழலில் காணப்பட்டது. | காலநிலை மாற்ற நீர்ப்பாசன செயற்திட்டத்தின் மூலம் தற்போது நிலையங்களின் வளவில் இயந்திர உபகரணங்கள் தரித்து வைப்பதற்கான கட்டிடமொன்றை நிர்மாணிக்கப்படுகின்றது. | இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 28 குழு அதிகாரப் பிரதேசத்தில் இருந்த 119,197 விவசாய குடும்பங்கள் இருந்ததுடன் குழு அதிகாரப் பிரதேசத்தில் ஒட்டுமொத்தமான விவசாய குடும்பங்களின் அளவுடன் ஒப்பிடும் போது சிறுவர் வைப்பு கணக்கின் எண்ணிக்கை 1945 ஆக 1.63 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த இலக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டும். | சிறுவர் வைப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி | பிரிவுகளில் சிறிய குழுக்களை |

| | | | |
|---|---|---|---|
| | சேவை அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 2.6.2(1) ஆம் பந்தியின் பிரகாரம் பிரிவுகளில் சிறிய குழுக்களை ஸ்தாபித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துவதற்கு கமநல வங்கிகளுடன் பங்களிப்பை செய்து கொள்ளுதல் பிரிவுக்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் பொறுப்பாக இருந்த போதிலும் 34 குழு அதிகாரப் பிரதேசத்தில் 152,516 விவசாயக் குடும்பங்கள் காணப்பட்ட போதும் கமநல வங்கிகளுடன் தொடர்புபடுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் சிறிய குழுக்களின் எண்ணிக்கை 5302 ஆகும். | உத்தியோகத்தர்களுக்கு வருடாந்த இலக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மேலும் அவர்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஸ்த்தாபித்தல் மற்றும் அவற்றை செயற்படுத்துதல் கமநல வங்கிகளுடன் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ரம்பேவ மற்றும் கஹட்டகஸ்திகிலிய கமநல வங்கிகளால் 2015/2016 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்த சோள கடன் தொகையில் முறையே ரூபா 578,271 மற்றும் ரூபா 1,781,652 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 2,359,923 நிலுவைக் கடன் தொகை காணப்பட்டதுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 06 வருடங்களுக்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அந்த கடன் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2015/2016 சோள நிலுவை கடன் பணத்தை அறவிடுவதற்கு நிலுவைக் கடன் விவசாயிகளை நீதி மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர். | நிலுவைக் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கால ரீதியில் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 04/2012 (கமநல வங்கி) சுற்றறிக்கையின் 1.6 (ii) இன் பிரகாரம் விவசாய மக்களின் சேமிப்பு பழக்கத்தை அதிகரித்தல் மற்றும் அதன் மூலம் அவர்களின் முதலீட்டு வலுவை அதிகரிப்பதற்கு உதவி வழங்குதல் கமநல வங்கியின் | விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு அறிவித்து வைப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தூர நோக்கமாக இருந்த போதிலும் பல வருட காலம் முதல் பணம் வைப்புச் செய்யப்படாத கணக்குகள், வைப்புத் தொகை ரூபா 100 மாத்திரம் காணப்பட்ட கணக்குகள் மற்றும் ஆரம்ப வைப்புத் தொகைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட 116 செயலிழந்த கணக்குகள் தொடர்பாக 12 கமநல சேவை குழுக்களுக்களுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | 07 கமநல சேவை குழுக்கள் 2016 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட 317 மகளிர் விவசாய அமைப்புக்களில் 159 உம் ஆரம்ப வைப்பை மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது. | செயற்படு நிலையில் காணப்படுகின்ற மகளிர் விவசாய அமைப்பு கட்டாயமாக வைப்பை மேற்கொள்வதுடன் ஏனைய விவசாய அமைப்புக்களை ஊக்குவித்து வைப்பினை பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சேமிப்பினை அதிகரிப்பதற்பதற்காக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய கமநல சேவைகள் திணைக்களத்தின் இலக்கம் 04/2012 ஆம் என்ற சுற்றறிக்கையின் 3.4.2 ஆம் பந்தியின் பிரகாரம் விவசாய ரீதியான கடனை தீர்க்கும் ஆகக் கூடிய காலம் 06 மாதங்களாக இருந்த போதிலும் 1998/1999 பெரும்போகத்திலிருந்து 2021/2022 பெரும்போகம் வரையான 01 முதல் 24 வருடங்கள் வரையான காலத்தில் 31 கமநல சேவைக் குழுக்களில் 3421 விவசாயிகளிடமிருந்து ரூபா 57,921,279 நிலுவைக் கடன் அறவிட வேண்டியிருந்தது. | அந்த நிலுவைக் கடனை விவசாயிகளின் குறித்துரைத்த குழுவிற்கு மற்றும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும். | நிலுவைக் கடனை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கெக்கிராவ கமநல வங்கியினால் விநியோகிக்கப்பட்ட செயற்திட்ட கடன் தொகையில் 03 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையிலான கால வீச்சில் இருந்து கொண்டுவரப் படுகின்ற ரூபா 2,316,570 ஆன 47 நிலுவைக் கடன் மீதிகள் 2022 திசெம்பர் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 மே 24 இல் உள்ளவாறு 03 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையிலான கால வீச்சில் இருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,329,829 கடன் மீதியை 29 விவசாயிகளிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. | கடனை அறவிடும் செயற்பாடுகளை செயற்திறனாக பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஏ) | 2001 ஆம் ஆண்டில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஆட்டியாகல கமநல வங்கியினால் 161 சந்தர்ப்பங்களின் போது விநியோகிக்கப்பட்ட ரூபா 1,064,497 விவசாயக் கடனை அறவிடுவதற்காக அதற்குரிய கடன் விண்ணப்பப்பத்திரம், உடன்படிக்கைப் பத்திரம் மற்றும் உறுதிச்சீட்டுக்கள் காணப்படாமையின் காரணமாக நியாய சபைக்கு அனுப்புவதற்கு முடியாதிருந்தது. | இந்த காலத்தில் விநியோகிக்கப்பட்ட கடன் தொகைகளுக்குரிய கடன் விண்ணப்பப்பத்திரம் மற்றும் உடன்படிக்கை பத்திரங்கள் உரியவாறு பூர்த்தி செய்யப் படாமையின் காரணமாக கடனாளிகள் உள்ளபடியாக கண்டறிவதற்கு முடியாதிருந்தது. | கடனை விநியோகிப்பதற்குரிய கடன் விண்ணப்பப்பத்திரம் மற்றும் கடன் உடன்படிக்கைப் பத்திரம் மற்றும் உறுதிச்சீட்டுக்களை பாதுகாப்பாக பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஐ) | மிகிந்தலை கமநல வங்கியில் உள்ள செயற்திட்டத்திற்குரிய நிதி மோசடி தொடர்பாக 2013 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட நிதிப்பிரமாணம் 104(அ) பரிசோதனையின் பிரகாரம் அறவிட வேண்டிய தொகையில் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளாவறு ரூபா 1,958,550 தொகையை அறவிட வேண்டி காணப்பட்டது. | நிதிப்பிரமாணம் 104 இன் பரிசோதனையின் பிரகாரம் அந்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரையிலும் அந்தப் பணம் செலுத்தப்படாமையினால் பிரதான அலுவலகத்திற்கும் அறிவித்து அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. | உரிய தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | நிலுவைக் கடன்தாரர்கள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை தயாரித்து அதற்குரிய மாதிரிகளின் மூலம் தகவல்களைப் பெற்று நிலுவைக் கடனை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை | நிலுவைக் கடனை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைக் கடனை விரைவாக அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்க வேண்டியிருந்த போதிலும் பலாகல கமநல வங்கியில் ரூபா 2,592,712 ஆன கலாவதியான கடன் தொடர்பாக கணக்காய்வுத் திகதியான 2023 ஏப்ரல் 24 வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஓ) | ஹொரவப்பத்தானை கமநல வங்கியில் கடன் உடன்படிக்கை காணாமல் போனமை மற்றும் சில உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமையின் காரணமாக 07 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான காலத்திற்குரிய கூட்டுமொத்தமான ரூபா 551,394 ஆன 50 கடன் மீதிகளை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முடியாதிருந் ததுடன் அதற்கு பொறுப்புவாய்ந்த தரப்பினர்களுடன் தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிறுவனப் புத்தகப் பதிவேடுகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | கெப்பிட்டிக்கொல்லாவ கமநல வங்கியால் 3355 வைப்பாளர்களிடமிருந்து ரூபா 1,503,032 பெறுமதியான வைப்புக்கள் பேணிச்செல்லப்பட்ட போதிலும் அந்த வைப்புக்களைப் பதிவிடுவதற்காக பொருத்தமான மாதிரிப் படிவத்தின் பிரகாரம் வைப்பு பேரேடு பேணிச் செல்லப்படாமை மற்றும் காலாண்டு ரீதியில் வைப்பிற்காக வட்டி கணிப்பிடுவதற்கும், அந்த வைப்பு மீதிகளை நாளதுவரையாக பேணிச்செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புக் கணக்குகள் நாளதுவரையாக பேணிச்செல்லப்படடல் வேண்டும். |